# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.29/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.6 |
| Name | : | டாக்டர்.அசோக்குமார் |
| Father's Name | : | சுப்பிரமணி |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | .46 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 24.10.2025.

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில் இல்லை, குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது உதவி பேராசிரியராக கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரியில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் வந்தவாசி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது 11.12.2016ம் தேதி மாலை 3.00 மணிக்கு சுமார் 25 மதிக்கத்தக்க ஸ்ரீதேவி என்ற பெண் நபர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரித்தபோது அவர் தன்னை 2 தெரிந்த நபர்கள் (காதலன் மற்றும் அவரது தாயார்) கையாலும் கட்டையாலும் அன்று காலை 11.00 மணி அளவில் மழையூர் கூட்டுரோட்டில் வைத்து தாக்கப்பட்டதாக கூறினார்.

அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. 1) முதுகின் பின்புறத்தில் வீக்கத்துடன் கூடிய காயம். 2) வலது முழங்கையில் வீக்ககாயமும், 3) கால்களில் வலியும் இருப்பதாக சொன்னார் அவருக்கு வேண்டிய முதல் உதவி சிகிச்சை அளித்தேன். பின்பு 19.03.2017ம் தேதி அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையின் கோப்புகளின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.த.சா.ஆ.4 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் மேடு பள்ளமான இடங்களில் தவறி விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**மறு விசாரணை.**

இல்லை.